DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No:205/2025**
**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**
Prosecution witness - 1 (LW -1)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.மாலிக் பாட்ஷா | Caste | : | |
| Father Name | : | திரு.சையது | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **05.01.2026.**

**PW -1 (LW -1 )**

(எதிரிகள் ஆஜர்.) (சாட்சி அவருடைய ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்.)

**முதல் விசாரணை:**

நான் தற்போது தென்னூர் ஆழ்வார் தோப்பில் குடியிருந்து வருகிறேன். நான் லோடுமேனாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 3 வருடங்களுக்கு முன்பு சாப்பாடு வாங்க சென்றேன். அங்கு கூட்டமாக இருந்தது. மூன்று பேர்கள் சேர்ந்து என்னை தள்ளிவிட்டார்கள். நான் கீழே விழுந்து மண்டை உடைந்து ரத்தமாக வந்தது. பிறகு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து செல்லப்பட்டேன். அங்கு தில்லை நகர் போலீசார் வந்து என்னை விசாரித்து கையெழுத்து வாங்கி சென்றார்கள்.

அந்த புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.1** ஆகும். ஆனால் என்னுடைய தோள் பட்டையிலும், இடது கழுத்திலும் கத்தி கீறல் இருந்ததை நான் பார்த்தேன். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

II ADDL COURT TRICHY

**<u>எ.த.கு.வி</u> :**

| | |
|---|---|
| **கேள்வி** | நீங்கள் ஜல்லி கற்கள் மீது விழுந்ததால் தான் காயம் ஏற்பட்டது என்று சொன்னால்? |
| **பதில்** | நான் விழுந்தவுடன் மயக்கம் அடைந்துவிட்டேன். |
| **கேள்வி** | அங்கு கூட்டமாக இருந்த பொழுதுதான் அங்கு நீங்கள் பார்க்க சென்றீர்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | யார் தள்ளிவிட்டார்கள் என்ற விவரம் உங்களுக்கு எதுவும் தெரியாது என்றால்? |
| **பதில்** | நான் மயக்கமாகிவிட்டேன். |
| **கேள்வி** | போலீசார் உங்களிடம் கையெழுத்து மட்டும் வாங்கி சென்றார்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | எழுதாத வெள்ளை பேப்பரில் தான் போலீசார் உங்களிடம் கையெழுத்து வாங்கி சென்றார்கள் என்றால்? |
| **பதில்** | சரிதான். |

**<u>மறுவிசாரணை</u> :** இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 05.01.2026 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 05.01.2026

HIGH COURT, TRICHY